# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் வெளிநாட்டு மொழி தொடர்பிலான பரீட்சை - 2020 (2024)

இலங்கை வெளிநாட்டுச் சேவை அதிகாரிகளுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் வெளிநாட்டு மொழிப் பரீட்சை, 2024, திசெம்பர் மாதம் கொழும்பிலும் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடைபெறும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

02. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் இரண்டும் ஒரே நேரத்தில் பரீட்சார்த்திகள் தோற்றும் வகையில் நேர அட்டவணை தயாரிக்கப்படும்.

03. **பாடத்திட்டம்:** முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை முறைப்படுத்தும் பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் வெளிநாட்டு மொழிப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் இணைப்பு "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி, ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறு அமர்வுகளில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்களுக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

04. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

### முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

| பாட இல. | பாடம் | நேரம் மணி |
|---|---|---|
| பகுதி I | | |
| 01 | நிதியியல் | 03 |
| 02 | இலங்கையின் வரலாறு மற்றும் புவியியல் | 03 |
| பகுதி II | | |
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம் | 03 |
| 04. | இராஜதந்திர நடைமுறை | 03 |
| 05. | சர்வதேச விவகாரங்கள் | 03 |
| 06. | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக் குறிப்பு, வெளிநாட்டு சேவை விதிமுறைகள் மற்றும் கணினித்திறன் | 03 |

### இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

| பாட இல. | பாடம் | நேரம் மணி |
|---|---|---|
| பகுதி I | | |
| 21 | இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி | 03 |
| 22 | நிர்வாகம்<br>(அ) அலுவலக அமைப்புகள் மற்றும் அமைப்பின் முறைகள்<br>(ஆ) தாபன விதிக்கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II) | 03 |
| பகுதி II | | |
| 23 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச சட்டம் | 03 |
| 24 | இராஜதந்திர நடைமுறை | 03 |
| 25 | சர்வதேச விவகாரங்கள் | 03 |

### வெளிநாட்டு மொழிகள்

| பாட இல. | பாடம் | நேரம் மணி |
|---|---|---|
| 07 | அரபு மொழி | 02 |
| 08 | பிரெஞ்சு மொழி | 02 |
| 09 | ரஷ்ய மொழி | 02 |
| 10 | ஸ்பானிய மொழி | 02 |
| 11 | ஹிந்தி மொழி | 02 |
| 12 | சீன மொழி | 02 |
| 13 | ஜெர்மனிய மொழி | 02 |
| 14 | யப்பானிய மொழி | 02 |
| 15 | இத்தாலிய மொழி | 02 |
| 16 | கொரிய மொழி | 02 |

5. இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களின் கவனத்திற்கென, கீழே மேற்கோள் காட்டப்பட்ட 1966, செத்தெம்பர் 4 ஆந் திகதியிடப்பட்ட 701 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி கீழே தரப்பட்டுள்ளது.

40% வீதமான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறவேண்டும்.

2.4 அலுவலர் ஒருவர், ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பல தடவைகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் தேர்ச்சி பெற்றதும் அத்தேர்வில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவார்.

**குறிப்பு:-**

(i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புகளுடனான இலங்கை அரசின் பாராளுமன்ற முறைமையை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பல்தரப்பு அதனுடன் தொடர்புபட்ட நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர சட்டம் மற்றும் உடன்படிக்கைகளுக்கான சட்டம் போன்ற விடயப்பரப்பை உள்ளடக்கியிருக்கும்.

(iii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்ற அலுவலர் ஒருவர், பரீட்சையில் உரிய பாடங்களில் சித்திபெற்றுள்ளார் எனக் கருதி, 'அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்' எனும் வினாத்தாளுக்கு தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

3. **வெளிநாட்டு மொழிகள் :**

3.1 வெளிநாட்டு மொழிகள் :

(i) அரபு மொழி
(ii) பிரஞ்சு மொழி
(iii) ரஷ்ய மொழி
(iv) ஸ்பானிய மொழி
(v) ஹிந்தி மொழி
(vi) சீன மொழி
(vii) ஜேர்மன் மொழி
(viii) யப்பான் மொழி
(ix) இத்தாலிய மொழி
(x) கொரிய மொழி

3.2 மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு மொழிகளுக்கான எழுத்துப்பரீட்சை ஒவ்வொன்றும் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டிருப்பதுடன், அதில் சித்தியடைவதற்கு 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளை பெற வேண்டும்.

08-221

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.